பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

"ஒருவனை அவன் தாய்
தேற்றுவதுபோல் நான்
உங்களைத் தேற்றுவேன்;
நீங்கள் எருசலேமிலே
தேற்றப்படுவீர்கள்."

ஏசாயா 66:13

செய்தி மலர்
2022
மார்ச்

இதழ் : 11
மலர் : 18



# சபை ஊழியரின் அன்பு மடல்



கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்திலே சபையோர் அனைவரையும் வாழ்த்துகிறேன். கடந்த பேரிடர் காலங்களில் எல்லாம் கூட கர்த்தர் நமது சபையின் குடும்பங்கள், சகோதர, சகோதரிகள், சிறுபிள்ளைகள் யாவரையும் சுகத்தோடும், பெலத்தோடும் முழு ஜீவனோடும் காத்த தேவாதி தேவனை, மகிமைக்குப் பாத்திரரை நாம் யாவரும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி சொல்லி துதித்து மகிமை படுத்துவோம்.

கடந்த இரண்டு மாதங்கள் முடித்து, மூன்றாவது மாதத்திற்குள்ளாய் பிரவேசிக்க செய்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். கடந்த மாதம் நமது சபையில் நடைபெற்ற எல்லா ஆராதனைகள் ஜெப கூட்டங்கள், சகோதரிகள் ஐக்கிய கூடுகை, வாலிபர் ஐக்கிய கூடுகை, விசேஷமாக அறுப்பின் பண்டிகை என எல்லாவற்றிலும் கர்த்தரின் நாமம் மகிமைபட்டதற்க்காக நாம் யாவரும் அந்த சமாதானத்தின் தேவனுக்கு ஸ்தோத்திர பலிகளை ஏறெடுப்போம். கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும், அன்போடும் நடத்துவார் என்ற விசுவாசத்தோடு வருகின்ற புதிய மாதத்திற்குள் பிரவோசிப்போம்.

வருகின்ற புதிய மாதம் 2-ஆம் தேதியிலிருந்து உபவாச (லெந்து) நாட்கள் ஆரம்பிக்கின்றது, இயேசு கிறிஸ்த்து வனாந்திரத்தில் உபவாசித்து, ஜெபித்து, ஆவியின் வல்லமையை வெற்றிக்கொண்டார். நாமும் வருகின்ற 40 நாட்கள், உபவாசித்து, கர்த்தரின் பாதத்தில் காத்திருப்போம்.

தேவ அன்பையும், அவற்றின் வெளிபாடுகளையும் உணர்ந்தவர்களாய், நாமும் மற்றவர்களோடு அன்போடு இசைந்திருக்க முற்படுவோம். கர்த்தருடைய எல்லா சிருஷ்டிப்புகளும் அவரின் அன்பை அதிகமாக வெளிப்படுத்துகிறது.

"வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. (சங் – 19:1)"

நம்மை படைப்பதற்கு முன்பே மனிதனின் தேவை அறிந்து, சூரியன், சந்திரன், சமுத்திரம், மலைகள், பள்ளத்தாக்குகள், மரம், செடி, கொடி, காய், கனி, மிருக ஜீவன்கள் என எல்லாவற்றையும் நமக்காக சிருஷ்டித்து, நம்மில் அன்பு கூர்ந்தார், அவர் நம்மேல் வைத்த அன்பு அளவற்ற அளவில்லாதது. நமக்கு நம் ஜீவிய நாட்களில் கிடைத்திருக்கும், தாயின் அன்பு, தகப்பனின் அன்பு , சகோதர அன்பு ,சிநேகித அன்பு ,போதகரின் அன்பு இவைகள் எல்லாவற்றிற்கும் மேலானது ஆத்தும் நேசரின் அன்பு என்பதை எந்நாளும் உணர்ந்தவர்களாய், நன்றியுள்ள இருதயத்தோடு வாழ கர்த்தர் கிருபை செய்வாராக.

நாம் தேவ ஆவியினாலே நடத்தப்பட வேண்டும் "எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்". (ரோமர் -8:14)
"

ஒருவனை அவன் தாய் தேற்றப்படுவது போல் நான் உங்களைத் தேற்றுவேன் நீங்கள் எருசலேமில் தேற்றப்படுவீர்கள்" (ஏசாயா 66:13) அந்த எல்ஷடாய் என்றும் நம்மை தேற்றுவார், ஆற்றுவார், அரவனைத்து மகனே, மகளே கலங்காதே என்பார்.

"இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும், எத்தனை இன்பமுமானது. அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும், ஜீவனையும் கட்டளையிடுவார். சிநேகிப்பான்" (நீதி-17:7). தேவபிள்ளைகளே நம் மீது அளவற்ற அன்பையும், பாசத்தையும், சிநேகத்தையும் வைத்த "இயேசுவை நேசிப்போம்".

மரியாள் ஆண்டவரை அன்பாய் ரபூனி என்று அழைத்தாள் (யோவான்-20:16). அதுபோல நாமும் அவரை நல்ல போதகரே என்று அன்பு கூறுலாம் காரணம் கிறிஸ்து ஒருவரே ஜீவனுக்கு வழிகாட்டுகிற போதகர்.

மனவாளன் மனவாட்டியின்மேல் மகிழ்ச்சியாயிருப்பது போல, உன் தேவன் உன்மேல் மகிழ்ச்சியாயிருப்பார் (ஏசாயா-62:5) பவுல் சொல்வதுபோல, புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்தும் . . . பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதை தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைதாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் (எபேசியர்-5:25-27). அவர் நம்மீது அதிகமாய் அன்புகூர்ந்திருக்கிறார்.

நாமும் வருகின்ற பரிசுத்த உபவாச நாட்களில் ஒருவரில் ஒருவர் அன்பு கூறுவோம், வேதத்தை வாசிப்போம், நேசரை நேசிப்போம். நம்மை காண்கிறவர்கள் கர்த்தரை காண தேவன் தாமே கிருபை செய்வாராக. வருகின்ற மாதத்தில் நம் சபையில் நடைபெறப் போகிற ஒவ்வொரு ஆராதனைகள், ஜெப கூடுகைகளுக்காக ஜெபித்துக் கொள்வோம். கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் அன்போடும், சமாதானத்தோடும், தேவ பக்தியோடும் நடத்துவாராக. ஆமென்.

கிறிஸ்துவக்குள் அன்பு சகோதரர்,
ஜெயசேகர்

## தேவ செய்தி

### நாம் தெரிந்து கொள்ள பட்டவர்கள்

நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; (யோ – 15:16)

இவ்வுலகத்தை சிருஷ்டித்த தேவாதி தேவன் நம்மை தெரிந்து கொண்டார். இந்த உலகிலே இருக்கிற அநேக புற ஜாதி மக்கள் பல விதங்களில் தன்னுடைய சரீரத்தை காயப்படுத்தி துன்பப்படுத்தி படைத்த தேவனை தேட முயற்சிக்கின்றனர் , ஆனால் நம்முடைய வேதத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறுகிறார். நான் உங்களை தெரிந்து கொண்டேன் என்று. என்ன ஒரு ஆச்சரியமான அதிசயமான காரியம். தேவன் ஆபிரகாமை தெரிந்து கொண்டார். அதன் மூலமாக இஸ்ரவேல் ஜனங்களை தமக்காக தெரிந்து கொண்டார்.

இந்த உலகில் எத்தனையோ இனங்கள் இருந்தாலும் குறிப்பாக இஸ்ரவேல் ஜனங்களை ஆண்டவர் தெரிந்து கொண்டார். அதை போலவே ஆவிக்குறிய இஸ்ரவேலர்களாக நம்மை தேவன் தெரிந்து கொண்டார். "எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்." (ரோமர் 8:30)

1. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்;(I கொரி 1:27)

இவ்வுலகில் மிகவும் சிறந்தவர்களாக ஞானிகள் காணப்படுகிறார்கள். இவர்களைதான் உலகம் போற்றி புகழ்கிறது. ஆனால் தேவன் இவர்களை வெட்கப்படுத்தும் படி பைத்தியமான நம்மை தெரிந்து கொண்டார். ஞானிகள் வேதத்தில் காரியங்களை நம்ப மறுக்கிறார்கள், கர்த்தரை சந்தேகிக்கிறார்கள். "அதிக படிப்பு உடலுக்கு இளைப்பு" (பிரசங்கி 12:12)படைப்பு இருக்கிறது என்றால் படைத்தவர் இருக்கிறார். என்பதை நம்ப மறுக்கிறது இந்த ஞானிகள் கூட்டம். எனவேதான் நம்மை தெரிந்து கொண்டார். திக்குவாயும் மந்த நாவும் உள்ள மோசேயை தெரிந்து கொண்டு எகிப்திய ஞானிகளை வெட்கப்படுத்தும்படி அவனை கொண்டு அடையாளங்களை நிறைவேற்றினவர் நமது தேவன். மீன் பிடித்து கொண்டிருந்த பேதுருவை தெரிந்து கொண்டார். அவன் பெரிய ஞானவான் அல்ல. ஆனால் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு அவர் ஒரு வல்லமையுள்ள அப்போஸ்தலனாக காணப்பட்டார் பேதுரு. ஒரே பிரசங்கத்தில் 3000 பேர் 5000 பேர் என்று இரட்சிக்கபட்டார்கள். இவ்வாறாக தேவன் பேதுருவை பயன்படுத்தினார் எனவே நாமும் தேவனுக்குள்ளாய் ஒப்புகொடுக்கும்போது நம்மை பயன்படுத்துவார்.

2. பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்.

இந்த உலகம் பெரிய காரியங்களை செய்ய பலவான்களை நாடுகிறது. ஆனால் பெலவீனமானவர்களை தெரிந்து கொள்கிறார், கிதியோன் பயந்து போய்ஆலைக்கு சமீபமாய் போராடியபோது கர்த்தர் அவனை நோக்கி பார்த்து உனக்கு இருக்கிற இந்த பெலத்தோடு போ, நீ இஸ்ரவேலை மீதியானாரின் கைக்கு நீங்கலாக்கி இரட்ச்சிப்பாய்." என்றார் (நியா 6:14) மனாசேயில் என் குடும்பம் பெரியது. என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்கிறார். இவ்வளவு பெலவீனமான கிதியோனை கொண்டு பலமுள்ள மீதியானியரை வெட்கப்படுத்தி வெற்றியை கொடுக்கிறார்.

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு ஒரு பெலவீனம் இருந்ததாக வேதத்தில் வாசிக்கிறோம், அவருக்கு சரீரத்தில் ஒரு முள் இருந்தது, கர்த்தரோ அவருடைய பெலவீனத்திலே தன்னுடைய பலத்தை பூரணமாய் விளங்க

செய்தார். தேவன் அப்போஸ்தலனாகிய பவுலை அந்நாட்களில் எடுத்து பயன்படுத்தினார். அவர்

எழுதின நிருபங்கள் இன்று வேதத்தில் இடம் பெற்று அநேகமாயிரம் தேவனுடைய பிள்ளைகளை தேவனுக்கு நேராய் வழிநடத்துகிறது. நான் பெலவீனமானவன் என்று ஒதுங்காதபடி தேவனிடத்தில் ஒப்பு கொடுக்கும் போது பலவீனமான நம்மை தேவன் பயன்படுத்துவார்.

3. உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்.(I கொரி I:28)

தாவீது கர்த்தர் தெரிந்து கொண்டு சாமுவேலை தாவீது வீட்டிற்கு அபிஷேகம் பண்ணும்படி அனுப்புகிறார். தாவீது தகப்பனாகிய ஈசாய் தன்னுடைய குமாரரில் ஏமு பேரை சாமுவேலுக்கு முன்பாக கடந்து போகபண்ணினார், தாவீதை கடந்து போக அழைக்கவில்லை, காரணம் தாவீது ஆடு மேய்ப்பவனாய் இருந்தான். அவனுடைய சகோதரர்கள் யுத்த புருஷராய் இருந்தார்கள். கர்த்தரோ அவர்களை புறக்கணித்து தாவீதை தெரிந்து கொண்டார் ஆடு மேய்த்த தாவீதை இஸ்ரவேல் ஜனங்களை அரசாளும்படியாக தெரிந்து கொண்டார்.

லேயாளும் அற்பமாய் எண்ணப்பட்டாள் என்று வேதத்திலே வாசிக்கிறோம். காரணம் அவளுடய தோற்றம் அழகற்று கூச்சப்பார்வையுடையதாய் இருந்தது. ஆனால் கர்த்தர் லேயாள் பக்கம் நின்றவர். ஏராளமான குழந்தை செல்வங்களை தந்தார். அற்பமாய் எண்ணப்பட்ட லேயாள் மற்றும் தாவீதின் வம்சத்திலே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிறக்க சித்தமானார் ,

தேவனுடைய பிள்ளைகளே ஒரு வேளை நாம் மற்றவர்களுடைய பார்வையிலே அற்பமாய் காணப்படலாம். புறக்கணிக்கப்பட்டவர்களாய் இருக்கலாம்.ஆனால் தேவனுடைய அழைப்பும் தெரிந்து கொள்ளுதலும் விஷேசித்தது. தாவீது லேயாளை போல தேவனிடத்தில் நம்மை ஒப்பு கொடுப்போம் நம்முடைய வாழ்க்கையையும் தேவன் மாற்றிபோடுவார்

ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக !

# இசபெல்லா வயட்

பேராயர் கால்டுவெல்லின் அன்பு மகள் இசபெல்லா, இசபெல்லா பத்து வயது சிறுமியாக இருந்த போது பெற்றோருடன் இங்கிலாந்து சென்றிருந்தார். அங்கு பெற்றோரை விட்டுத் தனியாகச் சென்று விட்டாள்.

பெற்றோர் இசபெல்லாவை கலக்கத்துடன் தேடினர். இசபெல்லா தனியாக நிற்பதைக் கண்ட ஒருவர் அவரிடம் உன்னுடைய ஊர் எது? என்று கேட்டார். அதற்கு இசபெல்லா இடையன்குடி என்று பதில் அளித்தார்.

இடையன்குடி ஆலயம் கட்டுவதில் பெரும் பங்கு வகித்தவர் இசபெல்லா. தன்னுடைய தகப்பனாரின் அனுமதி பெற்று அநேகருக்கு கடிதம் எழுதி இடையன்குடி ஆலயம் கட்டப்பட பணம் சேகரித்தார். இளவயதிலேயே பாடகர் குழுவிற்கு பாடல் கற்றுக் கொடுத்து அதை நடத்தினார்.

இசபெல்லா 1868 பிப்ரவரி 19ம் தேதி வயட் என்ற மிஷனெரியை மணந்தார். வயட் முதலில் இடையன்குடியிலும் பின்பு 1880 முதல் 1895 வரை திருச்சியிலும் தம்முடைய மனைவி இசபெல்லாவுடன் இணைந்து ஊழியம் செய்தார்.

இசபெல்லா முதலாவது திருச்சியில் செய்த பணி பெண்கள் பள்ளியைத் துவக்கினார்.வயட் ஒரு ஆண்கள் போர்டிங் பள்ளியைத் துவக்கினார். அதுவே இன்று திருச்சியில் உள்ள பிஷப் ஹீபர் மேல்நிலைப்பள்ளி.

1891ம் ஆண்டு நவம்பர் 1ம் நாள் புத்தூர் சகல பரிசுத்தவான்கள் தேவாலயத்துக்கு இசபெல்லா வயட் அஸ்திபாரமிட்டார். அஸ்திபாரமிடும் அந்த ஆராதனையை அவருடைய கணவர் வயட் ஐயர் நடத்தினார்.
இசபெல்லா வயட் தாம் தம் தந்தையோடு இணைந்து இடையன்குடி ஆலயத்தைக் கட்ட உறுதுணையாய் இருந்ததுபோல தம் கணவர் வயட்டோடு இணைந்து திருச்சி, புத்தூர் சகல பரிசுத்தவான்கள்

ஆலயத்தைக் கட்ட உறுதுணையாய் இருந்தார். இங்கிலாந்திலும், இந்தியாவிலும் உள்ள தம்முடைய நண்பர்களுக்குக் கடிதம் எழுதி பணம் திறட்டித் தந்தார். 1895ம் ஆண்டு அவர்கள் தங்கள் தாயத்திற்குச் செல்லுமுன்னே பேராயர் ஜெல் அவ்வாலயத்தைப் பிரதிஷ்டை செய்தார்.

நம் சபையில் இசபெல்லாதான் கிறிஸ்மஸ் மர விழாவை 1864ல் தொடங்கித் தந்தவர். அந்தப் பழக்கம் திருநெல்வேலியிலிருந்து பிற இடங்களுக்கும் பரவியது.

## டாக்டர் சாமுவேல்

முதலாவது தேவனை அவருடைய அன்பை தங்கள் வாழ்க்கையினால் அறிவித்தவர்கள் அநேகர். அவர்களில் ஒருவர் டாக்டர் சாமுவேல்.

தேவனுடைய ஊழியத்தைச் செய்ய தம்மை அர்ப்பணித்தார். நெய்யூரில் டாக்டராக ஊழியம் செய்தார்.

தம்முடைய பணியை ஆஸ்பத்திரியில் செய்து கொண்டு இருந்தார். ஒரு இந்தியருக்கு ஆபரேசன் செய்ய எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திக் கொண்டு இருந்தார். அந்த மனிதனுக்கு உதவி செய்யாவிட்டால் அவன் மரிக்கக்கூடும்.
அப்பொழுது கண்ணீரோடு ஒரு வெள்ளைக்கார மாது தன்னுடைய வாலிப மகனைக் கைகளில் ஏந்திக் கொண்டு வந்தார். அந்த வாலிபன் ஒரு விபத்தினிலே உணர்விழந்தவனாய் இரத்தம் வடிய இருந்தான் .

டாக்டர் சாமுவேல் அந்த வாலிபனைப் பார்த்தார். அவனுக்கு முதலில் உதவி செய்யாவிட்டால் அவனும் இறக்கக்கூடும். என்ன செய்வதென்று திகைத்தார். இரண்டு பேரில் ஒருவருக்குத்தான் சிகிச்சையளிக்க முடியும்.
தான் ஊழியம் செய்ய வந்த இந்திய தேசத்தை சேர்ந்த மனிதனுக்கு முதலாவது சிகிச்சையளித்தார். பின்பு அந்த வாலிபனுக்கு

சிகிச்சையளிக்க வந்தார். அதற்குள் அந்த வாலிபன் மரித்துப் போயிருந்தான். அந்த வாலிபன் டாக்டர் சாமுவேலின் சொந்த மகன். அந்த வாலிபனைக் கொண்டு வந்தது அவருடைய மனைவி. தன் மகனுக்காய் கண்ணீர் விட்டுக் கதறினார்.

தங்கள் குடும்பத்தைவிட மற்றவர்களை நேசித்த இப்படிப்பட்டவர்களால்தான் இன்றைக்கும் கிறிஸ்தவ மார்க்கம் வளர்கின்றது.

நம்மை நாமே சிந்தித்துப் பார்க்க வேண்டிய நேரத்தில் இருக்கின்றோம். தங்களையே மேய்க்கின்ற மேய்ப்பர்கள் பெருகிக் கொண்டு இருக்கின்ற காலம் இது.

தளர்ந்த கைகளை திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள் மனம் பதறுகிறவர்களைப் பார்த்து நீங்கள் பயப்படாதிருங்கள். திடன் கொள்ளுங்கள் இதோ, உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார். அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள். ஏசாயா -35:3,4.

தேவனுடைய ஜனங்களை நேசிக்கின்ற ஊழியர்களை தேவன் எழுப்பித் தரும்படியாய் ஜெபிப்போம். கல்வாரி சிலுவையன்பைக் காண்பிக்கின்றவர்கள் எழும்பட்டும், நாமும் நம்முடைய சகோதரர்களுக்கு ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாக இருக்கின்றோம் என்ற வசனத்தின்படி ஜீவனைக் கொடுக்கும் அன்புடைய மேய்ப்பர்கள் எழும்ப ஜெபிப்போம்.
மனதுருக்கம் உள்ளவர்கள் தெய்வீக அன்பினால் தங்கள் இருதயத்தை நிரப்பியவர்கள் மட்டுமே தேவனின் அன்பை வெளிப்படுத்த முடியும். திரளான ஜனங்களைக் கண்டு அவர்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல் இருந்ததால் இயேசுகிறிஸ்து அவர்கள் மேல் மனதுருகினார். அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்ப வேண்டிக் கொள்ளச் சொன்னார்.ஜெபிப்போம், மனதுருக்கமுள்ள ஊழியர்களைத் தேவன் தருவார்.

கிறிஸ்துவின் பணியில்,
சகோதரர் எபிநேசர்

## ..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்
... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. கிருபா கலிய மூர்த்தி
செல்வன். ஷெரிடன் சைமன் பால்ராஜ்
சகோதரி. வித்யா வில்சன்
சகோதரி. அனிதா திவ்யராஜ்
சகோதரி. சாரா சவிதா சந்தோஷ்
சகோ. அருள்மணி
செல்வன். ஜேடன் பால் கிரண்குமார்
சகோ. ஜெயக்குமார்
சகோ. சுனில் சுந்தர்ராஜ்
செல்வன். டியோன் பென்சாம்
செல்வன். ஆல்வின் வர்கீஸ்
செல்வி. ஜான்சி ராணி ராஜவேல்
செல்வன். ஜோயல் ஜென்சார்
சகோ. பாலகிருஷ்ணன்
சகோ. சாமுவேல்
செல்வி. திவ்யா அருள்மணி
சகோ. ஜினு
செல்வன். ஜாண்ராஜ் ராஜவேல்
செல்வி. நிகிட்டா அருண் இம்மானுவேல்
சகோ. வினிஷ்
சகோ. ஜாண் மில்லர்
செல்வன். ஜெகு சாமுவேல் செல்வசிங்
செல்வன். அட்ரியல் கேமுவேல் தாஸ்
சகோ. ஜாண்போஸ்கோ
சகோதரி. மரியம் பாக்கியசெல்வி
சகோ. ஏசுரெத்தினம்
செல்வி. ஸ்டெஃபானா சதீஸ்குமார்
செல்வி. அபியா செல்வி தர்மர்
சகோ. லாசர் ராஜமணி
செல்வி. ஜெஸ்வின் ஆரோக்கியதாஸ்
சகோதரி. எழில் டேனியல்ராஜ்
சகோ. பால் டேனியேல்
செல்வி. ஜாஸ்மின் ஏஞ்சல் தாமஸ்
சகோதரி . ஷீபா ஜிவல்சிங்
சகோதரி. கீதா ஜெயக்குமார்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

### உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி .22:18)

திருமதி & திரு. ஆசீர்வாதம்
திருமதி & திரு. லாசர் ராஜமணி
திருமதி & திரு. ஜஸ்டஸ் விஜில் குமார்
திருமதி & திரு. சுகுமார்

"கர்த்தாவே, வருஷங்களின் நடுவிலே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும், வருஷங்களின் நடுவிலே அதை விளங்கபண்ணும்"
ஆபகூக் 3:2

# 2022 மார்ச் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/03/2022 | சகோ.காரூஸ் | சகோ.ஆசீர்வாதம் |
| 13/03/2022 | சகோ.ஃபிராங்கிளின் | சகோ.கிறிஸ்டோபர் |
| 20/03/2022 | சகோ.ஜாண் கெட்சன் | சகோ.அந்தோனி |
| 27/03/2022 | சகோ.வில்சன் | சகோ.ஸ்டாலின் |

## வெள்ளி ஆராதனை நேரம் காலை 9:00 முதல் 10:45 வரை
## மாலை 3:00 முதல் 5:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04/03/2022 | சகோ. எபிநேசர் | சகோ. ஜகன்நாதன் |
| 11/03/2022 | சகோ. ஆரோக்கிய ராஜ் | சகோ.ஆரோக்கிய தாஸ் |
| 18/03/2022 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 25/03/2022 | சகோ. பிரசாத் | சகோ.ஏசுரெத்தினம் |

02/03/2022 அன்று சாம்பல் புதன் ஆராதனை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு நேரம்– மாலை 6:30 முதல் 8:00 மணி வரை

10/03/2022 அன்று முழு இரவு ஜெபம் ஆராதனை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணி வரை

25/03/2022 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– வெள்ளிகிழமை மாலை ஆராதணைக்கு பின்
(வேத வினா பகுதி– நியாயாதிபதிகள்)

26/03/2022 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை
கூடுகையை பொறுப்பெடுத்து நடத்தும் குடும்பம் – சகோதரி. டெய்சி எபிநேசர்
(வேத வினா பகுதி–எஸ்தர் )

# 2022 மார்ச் மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1. றெகோபெயாம் வசமாய் இருந்த கோத்திரத்தார் யார்?

2. ஆலயம் எங்கே கட்டப்பட்டது?

3. கர்த்தருடைய மகிமையை இஸ்ரவேல் புத்திரர்கள் கண்டார்கள் சரியா? தவறா?

4. அருவருப்பான விக்கிரகங்களை வைத்திருந்த ராணி யார்?

5. தன் சகோதரனை கொன்ற ராஜா யார்?

6. யோனத்தானுக்கு பிறகு தாவீதுக்கு நண்பனாக இருந்தவன் யார்?

7. யார் சாலமோனை பெரியவனாக்கினார்கள்?

8. கல் தொட்டி எவ்வளவு தண்ணீர் பிடிக்கும்? அது என்ன உலோகத்தால் செய்யப்பட்டது?

9. விடுகதையினால் யார் சாலமோனை சோதித்தார்கள்?

10. இஸ்ரவேலராலே கொல்லப்பட்ட விசாரிப்புகாரன் யார்?

11. யாருடைய நாட்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது?

12. ஆரோனின் ஆசாரிய ஊழியத்தை தொடர்ந்த அடுத்த தலைமுறையினர் யார்?

13. ஆலயம் கட்ட எவ்வளவு ஆணிகள் தேவைப்பட்டது?

14.அந்நிய ஜாதியார் ஆலயத்தில் வந்து ஜெபிக்கும் போது கர்த்தர் ஜெபத்தை கேட்கமாட்டர். சரியா? தவறா?

15. முதியோர் ஆலோசனையை அலட்ச்சியம் பண்ணினவன் யார்?

**விடைகளை வருகின்ற 20-03-2022க்குள்**
**(WhatsApp #65040638) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்**
**II நாளாகமம் 1–27 ஆகிய அதிகாரங்களில் பதிலை கண்டுபிடிக்கவும்**

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

# 2022 –பிப்ரவரி மாத வேத வினாவுக்கு விடை

1. செருயாள், அபிகாயில் (1 நாளா 2:16)

2.ஆகாரியரோடும் யெத்தூர் நாப்பீஸ் நோதாப் என்பவர்களோடு பண்ணின யுத்தம் (1 நாளா 5:19,22 )

3.சோப்பாக் (1 நாளா 19: 16,18)

4. இஸ்ரவேலை தொகையிட்ட காரியம் (1 நாளா 21 : 1,7)

5.கீத வாத்தியங்கள் (1 நாளா 16:5)

6. ஏமான், பாடகன் (1 நாளா 6:33)

7. சேராள் (1 நாளா 7:24 )

8. யோனத்தான் (1 நாளா 20:7 )

9. எப்ராத்தா (1 நாளா 4:4 )

10. ஊலாமின் குமாரர் (1 நாளா 8:40)

11. சவுல் (1 நாளா 10:10)

12. தாவீதின் வீடு (1 நாளா 17:27)

13. அமாசாய் (1 நாளா 12:18)

14. ஐந்து (1 நாளா 2:4)

15.தோயூவுக்கு எதிரி ஆதாரேசர், ஆதாரேசருக்கு எதிரி தாவீது (1 நாளா 18:10)

## 2022 –பிப்ரவரி மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis.நித்தியா ஜோன்ஸ்
Sis. சுகந்தி தம்பு குமார்
Sis.வனித்தா காளிமுத்து
Sis.மெர்ஷிலின்தயா ஏசரெத்தினம்

# வாலிபர் பகுதி

## பரிசுத்தம்

கிறிஸ்துவுக்குள் பிரியமான வாலிப சகோதர, சகோதரிகளே இந்த மாதம் நாம் பர்க்க இருக்கும் தலைப்பு பரிசுத்தம் "நீ இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தோடும் சொல்லவேண்டியது என்னவென்றால்: உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்." லேவியராகமம் 19 :2

நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே.
1 பேதுரு 1:16

பரிசுத்தத்தை பற்றி நமக்கு தெரிய வேண்டுமென்றால் முதலாவது நாம் நம்முடைய இரட்சிப்பிற்க்கு செல்ல வேண்டும். நாம் எப்பொழுது மற்றும் இரட்சிப்பை பெற்றோம்

"ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." எபிரேயர் – 8:12.

அப்படியென்றால் இரட்சிப்பை நாம் இலவசமாய் பொற்று கொண்டோம். அதோடு கூட பரிசுத்தத்தையும் நமக்கு அவர் கொடுத்தார்.

பாவியாய் இருக்கும் போது அவர் நம்மை தேடி வந்தார். நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; யோவான் 15:16.

ஆனால் இரட்சிக்கப்பட்ட போது இருந்த அந்த பரிசுத்த வாழ்க்கை சில நாட்கள், சில மாதங்கள், சில வருடத்தில் குறைய ஆரம்பித்துவிடுகிறது.

அவர் நம்மை தேடி வந்ததின் மூலமாய் யாருமே கொடுக்க முடியாத மறுமையிலும் வாழும் வாழ்வை நமக்கு கொடுத்துவிட்டார்.

ஆனால் அந்த மறுமமை என்றும் பரலோகத்திற்கு செல்வது செல்லாதிருப்பது நம்மிடம்தான் உள்ளது.

பரிசுத்தமாய் வாழ்ந்தால் மறுமைக்குல் பிரவேசிப்போம் இல்லை என்றால் ஆக்கினைக்குள்ளாக
தீர்க்கப்படுவோம்.

"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்." மத்தேயு– 5:8.

"யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே." எபிரேயர் – 12:14.

நாம் பரிசுத்தமாக்கப்பட்டோம் ஆனால் அதை சிலர் அதை இழந்துவிட்டோம்.

"அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும்,
திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.

உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்." 1 கொரி 6 : 9,10,11.

நாம் பரிசுத்தமாய் வாழ்வதற்க்கு பிரதானமாய் காணப்படுவது எது என்றால் "அன்பு" எப்படி என்றால் "உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப்பற்றிக்கொண்டிருங்கள்." ரோமர் 12:9.

நம்முடைய அன்பு தீமையை வெறுக்கின்றதாய் இருக்க வேண்டும்:

எது தீமை "எப்படியென்றால், விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்தக் கற்பனைகளும், வேறே எந்தக் கற்பனையும், உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப்பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது" ரோமர் 13:9.

நியாயப்பிரமானத்தை பத்துகட்டளைகளையும் கடைபிடிக்கிறவன் எவனும் "பரிசுத்தவான்" அப்படியென்றால் "ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றெதிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்." ரோமர் 13:8.

"அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குசெய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது." ரோமர் 13:10.

பல வகை காவங்களுக்கு ஒருவர் அடிமைப்பட்டிருக்கின்றார். அவர் இந்த பாவங்களை விட வேண்டுமென்றால் அந்த பல பாவங்களை எப்படி விடுவது என்று சிந்திக்காமல் அவர் தேவ அன்பை பெறும்போது இந்த பாவங்கள் தானாய் விலகுவதை அவர் காணமுடியும்.

அன்புதான் நம்மை பரிசுத்திற்குல் இழுத்து செல்லுகிறது. ஆதலால் நம்மில் தேவ அன்பு இருந்தாலே நாம் "பரிசுத்தவான்கள்" தான்.

"நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்." 1 கொரி 13:1.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள் அன்பு திரலான பாவங்களை மூடும். பாவமாய் வாழ்வது "பரிசுத்த வாழ்வை" பரிசுத்த வாழ்விற்கு நம்மை நடத்தியது (அன்பு).

"அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்." 1யோ-4:8

அன்பில்லாதவன்/ பரிசுத்தமில்லாதவன் தேவனை அறியார்கள்.

பரிசுத்தமாய் வாழ்ந்த ஆசா:

"ஆசா தன் தகப்பனாகிய தாவீதைப்போல் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்." 1இராஜா-15:11.

என்ன செம்மையானதை செய்தான்?

"அவன் இலட்சையான புணர்ச்சிக்காரரை தேசத்திலிருந்து அகற்றி, தன் பிதாக்கள் உண்டுபண்ணின நரகலான விக்கிரகங்களையெல்லாம் விலக்கி,
தோப்பிலே அருவருப்பான விக்கிரகத்தை உண்டுபண்ணின தன் தாயாகிய மாகாளையும் ராஜாத்தியாய் இராதபடிக்கு விலக்கிவிட்டான்; அவளுடைய விக்கிரகத்தையும் ஆசா நிர்மூலமாக்கி, கீதரோன் ஆற்றண்டையிலே சுட்டெரித்துப்போட்டான்.

மேடைகளோ தகர்க்கப்படவில்லை; ஆனாலும் ஆசா உயிரோடிருந்த நாளெல்லாம் அவன் இருதயம் கர்த்தரோடே உத்தமமாயிருந்தது." 1இராஜா–15:12,13,14.

"ஆசா தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதைச் செய்தான்."

2நாளா–14:2

"தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைத் தேடவும், நியாயப்பிரமாணத்தின்படியும் கற்பனையின்படியும் செய்யவும் யூதாவுக்குக் கற்பித்து." 2நாளா–14:4நியாயப்பிரமாணத்தை கடைபிடித்து பரிசுத்தவானாய் வாழ்ந்தான் .

## பரிசுத்தமாய் வாழ்ந்த யோவான்:

"பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான்."லூக்கா – 1:17.

தனக்கு வழியை ஆயத்தம் பண்ணும்படி தெரிந்துக் கொள்ளபட்டவன்தான் யோவான்.

"அதேனென்றால் யோவான் நீதியும் பரிசுத்தமுமுள்ளவனென்று ஏரோது அறிந்து, அவனுக்குப் பயந்து, அவனைப் பாதுகாத்து, அவன் யோசனையின்படி அநேக காரியங்களைச் செய்து, விருப்பத்தோடே அவன் சொல்லைக் கேட்டு வந்தான்." மாற்கு 6:20

## பரிசுத்தமாய் வாழ்ந்த பவுல்:

"பவுல் ஆலோசனைச் சங்கத்தாரை உற்றுப்பார்த்து: சகோதரரே, இந்நாள்வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்குமுன்பாக நடந்துவந்தேன் என்று சொன்னான்." அப்போ 23:1

"விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி." 1தெசலோனிக்கேயர் 2:10.

## பரிசுத்தர் இயேசு கிறிஸ்து:

"என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்? நான் சத்தியத்தைச் சொல்லியிருக்க, நீங்கள் ஏன் என்னை விசுவாசிக்கிறதில்லை."

யோவான் –8:46.

"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;" பிலிப்பியர்–2:5.

"என் பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதிருப்பீர்களாக; நான் இஸ்ரவேல் புத்திரர் நடுவே பரிசுத்தர் என்று மதிக்கப்படுவேன்; நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்." லேவி 22:32

"அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்." வெளி 22:11

கர்த்தர்தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக.

வாலிபம் இயேசுவுக்கே.

## சகோதரிகள் பகுதி

அன்பான சகோதரிகளுக்கு, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்! மீண்டும் இச்செய்தி மலரின் வாயிலாக நான் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த மாத முழுவதும் நம்மை கண்மணிபோல் பாதுகாத்த தேவனுக்கு நன்றி கூறுவோம்.

"நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண் போகாது." – நீதி –23:18

நம்முடைய வாழ்க்கையில் எந்தக்காரியத்திலும் 'தொடக்கம்' என்று ஒன்று இருக்கும் போது; 'முடிவு' என்பது கண்டிப்பாக இருக்கும். 'உன் துவக்கம் அற்பமாயிருந்தாலும், உன் முடிவு சம்பூரணமாயிருக்கும் ன்றது வேதாகமத்திலேயே குறிக்கப்பட்டுள்ளது. நாம் நம் நம்பிக்கையிலேயே சந்தோஷமாயும்; நம் உபத்திரவத்திலே பொறுமையாயும், நம் ஜெபத்திலே உறுதியாயும் தரித்திருப்பது மிக அவசியமானதாகும்.

### 1.மனிதர்கள் மீது நாம் வைக்கும் நம்பிக்கை:

"நம்பிக்கையின் நங்கூரம்"– நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒரு கப்பலுக்கு மிகவும் தேவை சுக்கானும் , நங்கூரமும் என்பது நம் யாவருக்கும் தெரிந்த ஒன்றே. நம் வாழ்க்கையானது நங்கூரமாகிய – நம் இயேசு மீது கட்டப்பட வேண்டும். முப்புரிநூல் அறாது. நம் இயேசுவை நம் வாழ்வின் மத்தியஸ்தராக நாம் வைக்க வேண்டும்.

"நாசியிலே சுவாசமுள்ள மனிதனை நம்புவதை விட்டுவிடுங்கள்; எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம்." ஏசாயா –2:22.

நம்மை முகமுகமாக பேசும்போது உயரத்தில் தூக்குகிற மாதிரி, மேலே தூக்கிப் பேசுகிற எந்த மனிதனையும் நம்பாதேயுங்கள். அதே மனிதர்கள், நம் கஷ்ட நேரத்தில் அவர்கள் கைகளைத் தட்டி சிரிக்கும் காலம் கூடிய சீக்கிரத்தியேயே வரும் என்பதை மறந்து விடாதிருங்கள். எனவே, நம்பிக்கை மனிதர் மீது இருக்கக் கூடாது.

### 2.பணத்தின் மீதும், செல்வத்தின் மீதும் வைக்கும் நம்பிக்கை:

"பண ஆசை, எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது". 1தீமோ– 6:10 பணத்தை, பொன்னை, பொருளை இச்சித்து; நாம் நம் விசுவாசத்தை விட்டு வழுவி; அநேக வேதனைகளாலே நம்மையே, நாம் உருவக் குத்திக் கொண்டிருக்கிறோம். இச்சையானது கர்ப்பம் தரித்து; அது பாவத்தை பிறப்பிக்கிறது. 'பவத்தின் சம்பளம் – அது மரணத்தை' பிறப்பிக்கிறது.

சில நேரங்களில் அவைகள் நம்மை கடன் தொல்லையில் சிக்க வைக்கின்றது. தொழிற்கூடங்களில் நஷ்டம் ஏற்படுவதற்கு காரணம் – பண மோசடி, லஞ்சம் வாங்குதல். அநியாய வட்டிக்க விடுதல் தேவனுக்கு விரோதமான பாவமாகும்.

சகோதரிகளாகிய நாம், நம் குடும்பங்களில் கவனமாக இருக்க வேண்டும். நம் கணவரோ (அல்லது) நம் பிள்ளைகளோ இத்தகைய சிக்கல்களில் அகப்படாதவாறு, நாம் ஜெபித்து, ஆலோசனை கூறுவது மிக அவசியமானதாகும்.

## 3.சுய பலம், தாலந்துகள், பட்டம், படிப்பு, வேலை மீது நம்பிக்கை:

எனக்கு — சுய பலம், ஞானம், தாலந்துகள் உண்டு என்றும்; நானே தனியாக எதையும் சாதித்து விடமுடியும் என்று நாம் ஒருவரும் கூறிவிட முடியாது. அவ்வாறு கூறவும் கூடாது. இயேசுவோடு இல்லாமல், நாம் தனிமையாக இந்த உலகில், எந்த ஒரு காரியத்தையும் சாதித்து விட முடியாது. நமக்கு பலம், தாலந்துகள், வரங்கள்– இவை அனைத்தையும் தருபவர் இயேசு மாத்திரமே. இவை அனைத்தும் அவரிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் சிறந்த பரிசுகளே! படிப்பு, பட்டம், வேலை– இவை யாவும் இவ்வுலகிலேயே அழிந்து போக கூடிய ஆசீர்வாதங்களே! நாம் மரிக்கும்போது ஒன்றும் நம்முடன் வருவதேயில்லை என்பதை நாம் மறந்து விடக்கூடாது. பணம் சம்பாதிக்க, நமக்கு சிறந்த ஞானத்தை தருபவரும் அவர் மாத்திரமே! இயேசு கல்வி கற்றவர் அல்ல; ஆனால் மிகச் சிறந்த தேவ அறிவு படைத்தவர் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. நம் கண்ணீர் ஜெபமும், வேதவசனமுமே நம் வெற்றி வாழ்க்கைக்கு ஊன்றுகோலாகும். இயேசு மீது மாத்திரமே நம் நம்பிக்கை இருக்க வேண்டும். உண்மையான இயேசுவின் சிலுவை அன்பிற்கு நாம் அடிமையாக வேண்டும். இக்கடைசி காலத்தில், இவ்வுலகில் நமக்கு அத்தகைய அன்பு எங்கும் கிடைப்பதில்லை. கணவன், மனைவி, பிள்ளைகள் , பெற்றோர்கள் நம்மைக் கைவிடலாம். ஆனால் நம் நேசர், நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையோடு நம் வாழ்வை இன்னும் தொடருவோம்! வெற்றி நிச்சயம்! விடுதலை சத்தியம்! சாதிப்போம் இயேசுவுக்காக; நம் ஓட்டத்தை, நாம் ஜெயமாக ஓடி முடிப்போம்! தேவன் தாமே நமக்குத் துணையாக நிற்பாராக!

கர்த்தரின் பணியில்,
சகோதரி. பியூலா மெர்ஸி பால்.

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில





















# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

சபை முதன்மை ஊழியர்

சகோ. ஜெயசேகர்

96646444

செயலாளர்

சகோ. இயேசு ரெத்தினம்

23924262 - 97545812

பொருளாளர்

சகோ. ஜெகநாதன்

66889535 - 98852812

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி. எப்சிபா ஸ்டீஃபன்

67792009 - 56640551

வாலிப ஐக்கிய தலைவர்

சகோ. பிரசாத் சுந்தரேசன்

60781168

Church Website Address - ahmaditamilchurch.com

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்

எதுவாக இருந்தாலும்

எங்களுக்கு தெரிவிக்கவும்

உங்களுக்காக ஜெபிக்க

ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only